# கடவுளின்
# அன்பு



இனிய நண்பரே பயப்பட வேண்டாம், கலங்க வேண்டாம். உங்கள் துக்கம் மகிழ்ச்சியாக மாறும், ஆம், ஏனென்றால் "இயேசு உன்னை நேசிக்கிறார்" இந்த உலகம் உங்களைத் தாழ்த்தி வெறுக்கக்கூடும், ஆனால் இயேசுவின் அன்போ உங்களை மீட்டு பிரகாசிக்க செய்யும்.

இயேசுவின் அன்பு மிகவும் பெரியது, இந்த உலகில் உங்களை யாரும் இப்படி நேசிக்க முடியாது. உங்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையையும், அமைதியான மனதையும், தைரியத்தையும் கொடுக்க இயேசு காத்திருக்கிறார்.

யோவான் 14: 27-ல் இயேசு சொன்னார், அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்: என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்: மருள வேண்டாம்.

இயேசு உங்களுக்கு அமைதியும், நிம்மதியும், மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் தந்து ஆசீர்வதிக்க விரும்புகிறார். ஆனால் உங்களுக்கு தேவை, அவருடன் ஐக்கியம், ஏனென்றால் பாவம் மனிதனை கடவுளிடமிருந்து பிரித்து விட்டது,

எல்லா சாபத்திற்கும், துக்கத்திற்கும், மரணத்திற்கும் பாவம் காரணமாக இருக்கிறது, பாவத்தின் கூலி மரணம் என்று பைபிள் கூறுகிறது.

யோவான் 3:16 தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்

இயேசு நம்முடைய எல்லா பாவங்களையும் சிலுவையில் சுமந்தார், இறந்து மரணத்திலிருந்து எழுந்தார், உங்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையைத் தருவதற்காக அவர் உயிருடன் இருக்கிறார், நீங்கள் அவரை நம்பி, உங்கள் பாவங்களை ஒப்புக்கொண்டு, தீய வழிகளிலிருந்து மனந்திரும்பினால், உங்கள் இதயத்தை மன்னிக்கவும் சுத்தப்படுத்தவும் இயேசு தயாராக இருக்கிறார்.

1 யோவான்1:9 நம் பாவங்களை நாம் ஒப்புக்கொள்வோமென்றால் கடவுள் நம் பாவங்களை மன்னித்து, குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துவார். ஏனெனில் அவர் நம்பிக்கைக்குரியவர், நேர்மையுள்ளவர்.

*என் இனிய நண்பனே மனந்திரும்பி புதிய வாழ்க்கையின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள இயேசு உங்களை அழைக்கிறார். இந்த வாய்ப்பை நீங்கள் மறுத்தால், நியாயதீர்ப்பின் நாளில் அவரைச் சந்திக்கத் தயாராகுங்கள்.*

*அப்போஸ்தலர் 16:31 "கர்த்தராகிய இயேசுவை நம்புங்கள், நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் இரட்சிக்கப்படுவீர்கள்."*

*கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக!*

We are distributing this small track as per Indian Constitution Law Article 25

**தொடர்புக்கு:**